# அரசற்ற / நாடற்ற தேசங்கள்: அறிமுகம்

---

அரசற்ற / **நாடற்ற** தேசம் (Stateless Nations) என்பது தேசிய அரசியல் முறைமையில் பயன்படுத்தப்படும் ஒரு சிறப்பு வழக்காற்று பதமாகும். ஆனால் இதன் அரசியலை புவியியல் ஊடாகப் புரிந்துகொள்வது முக்கியமானதாகும். அரசற்ற / **நாடற்ற நிலை** என்பது ஒரு உலகளாவிய நிகழ்வு ஆகும், இதனால் பல தனிநபர்கள் மற்றும் சமூகங்கள் தமது கௌரவம், உரிமைகள் மற்றும் நிலையான வளர்ச்சியை இழந்துவிட்டன. அரசற்ற / **நாடற்ற** சமூகங்கள் தலைமுறை தலைமுறையாகப் பின்னடைவைச் சந்தித்து வருகின்றன. அரசற்ற / **நாடற்ற** தேசத்தவர்கள் பொதுவாக உலகம் முழுவதும் வாழ்கிறார்கள். மேலும், இவர்கள் தொடர்ந்து முக்கிய தலைப்புச் செய்திகளாக ஊடகங்களில் வருகின்றனர்.

அரசற்ற / **நாடற்ற** தேசம் என்றால் என்ன?, அரசற்ற / **நாடற்ற** தேசங்களின் எடுத்துக்காட்டுகள் எவை? இவர்களுக்கும் புவியியலுக்கும் இடையிலான தொடர்பினை புரிதலை ஏன் பெறவேண்டும்? மானிடப் புவியியல் உள்ளடக்கத்தில் இதனை எவ்வாறு புரிந்துகொள்வது? என்பதை விளக்கிக் கொள்ள வேண்டும். மனித உரிமைகள் பற்றிய சர்வதேசப் பிரகடனம் ”ஒவ்வொருவருக்கும் ஒரு தேசியத்தை பின்பற்றும் உரிமை உள்ளது” மற்றும் ”ஒருவரது தேசியத்தையும் எவரும் தன்னிச்சையாக பறிக்கமுடியாது’’ எனத் தெளிவாகக் கூறுகிறது. ஆனால் உலகெங்கிலும் உள்ள பல ஆயிரக்கணக்கான மக்கள் தமது குடியுரிமை மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியாதுள்ளனர். உலகின் நாடற்ற மக்களில் கணிசமான பகுதியினர் கட்டாய இடப்பெயர்வுக்கு உள்ளாகியுள்ளனர்

சில சந்தர்ப்பங்களில், தனிநபர்கள் மற்றும் சமூகங்கள் அரசாங்கச் சட்டத்தின் பிரகாரம் தமது தேசியத்தை இழக்கின்றனர். இதன்பின்னர் அவர்கள் தங்கள் தாய்நாடு எனக் கருதும் நாட்டிலிருந்து வெளியேற்றப்படுகின்றனர். மேலும் ஏனைய சூழ்நிலைகளின் நிமித்தம் அனுபவிக்கும் துன்புறுத்தல் மற்றும் பாகுபாடு காரணமாக தாய்நாட்டை விட்டுத் தப்பியோட வேண்டிய கட்டாயத்தில் நாடற்ற மக்கள் உள்ளனர். நாடற்ற நிலை என்பது மனித பாதுகாப்பின்மை மற்றும் கட்டாய இடப்பெயர்வுக்கு காரணமாகின்றதுடன், தேசிய மற்றும் பிராந்திய ஸ்திரத்தன்மைக்கு அச்சுறுத்தலாகவும் மாறிவிடுகிறது. உலகின் குடியுரிமைத் தகராறுகள் முக்கியமான தொரு அம்சமாக மாறியுள்ளது. பல்வேறு அரசுகள் மற்றும் சமூகங்களுக்கிடையில் பதற்றம் மற்றும் வன்முறையைக் கூட உருவாக்குகிறது. இத்தகைய சூழ்நிலைகளைத் தவிர்ப்பதிலும், நாடற்ற மக்களைப் பாதுகாப்பதிலும், அவர்களின் அவலங்களுக்கு நியாயமான தீர்வுகளைக் கண்டறிவதிலும் மனிதாபிமான அமைப்புகள் மதிப்புமிக்கதொரு பங்கைக் கொண்டுள்ளன. எவ்வாறாயினும், நாடற்றவர்கள் என்ற நிலை மற்றும் சர்ச்சைக்குரிய தேசியத்தின் பிரச்சினைகள் அரசுகளின் நடவடிக்கைகளின் மூலம் மட்டுமே திறம்பட தீர்க்கப்பட முடியும்.

**அரசற்ற / நாடற்ற தேசம் என்றால் என்ன?**

குறிப்பிட்டதொரு பிரதேசத்தில் தொடர்ந்தேர்ச்சியாக வாழ்கின்ற பொதுவானதொரு கலாசாரத்தை பேணுகின்ற மக்கள் குழுவாகும். இவர்கள் வரையறுக்கப்பட்டதும், நிரந்தரமானதுமான மக்கள் தொகை கொண்ட பிரதேசத்தில் சுயாதீனமானதொரு அரசியல் அலகாக செயற்படமுடியாதவர்களாகும். உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு விவகாரங்களைக் கையாள்வதற்கான இறைமையினைக் கொண்டிருக்காத மக்கள்

கூட்டமாகவும் இருப்பர். அடிப்படையில், இது அரசற்ற மக்கள் கூட்டத்தைக் குறிக்கிறது. உலகளவில் 10-15 மில்லியன் மக்கள் தமது தாய் நாட்டில் அந்நியர்களாக வாழ்வதாக மதிப்பிடப்பட்டுள்ளது. பல சந்தர்பங்களில் தாம் பிறந்து வளர்ந்த நாட்டில் இவர்களுக்கு இன, மத பாகுபாடுகளினால் பிரசாவுரிமை மறுக்கப்பட்டுள்ளது.

தாம் வாழும் நாடு அவர்களை அங்கீகரிக்காததால், அவர்கள் பிறப்புச் சான்றிதழ் பெறுதல், பாடசாலைக் கல்வியைப் பெறுதல், மருத்துவ வசதிகளைப் பெறுதல், சொத்துக்களைச் சேமித்தல், திருமணம் செய்து கொள்ளுதல் போன்ற வசதிகளைப் பெற்றுக் கொள்ள முடியாதுள்ளது. இதனால் இவர்கள் கௌரவமற்ற அல்லது இழிவான மக்களாகக் கணிக்கப்படுகிறார்கள். உலகெங்கிலும் உள்ள மில்லியன் கணக்கான கௌரவமற்ற அல்லது இழிவாக வாழும் அரசற்ற / நாடற்ற மக்களை 'ஒருநாட்டின் தேசிய சட்டத்திற்குள் பிரசாவுரிமை வழங்கப்பட்டு தேசத்தவர்களாக ஏற்றுக்கொள்ளப்படாத மக்கள் கூட்டம்' என சர்வதேச சட்டம் இவர்களை வரையறை செய்கிறது.

கட்டாயத்தின் நிமித்தம் தாய் நாட்டை விட்டு ஏனைய நாடுகளுக்குச் சென்று அகதிகளாக மக்கள் வாழ்கின்றனர். அதாவது அவர்கள் தங்கள் தாயகத்தை விட்டு வேறு நாடுகளில் தஞ்சம் புகுந்துள்ளனர். ஆனால், அனைத்து அகதிகளும் நாடற்றவர்கள் அல்ல. இவர்களில் தஞ்சம் புகுந்த நாட்டில் வாழ்விட உரிமை அல்லது பிரசாவுரிமை பெறாதவர்கள் நாடற்றவர்களாக கருதப்படுகின்றனர். அதேநேரம் பெரும்பாலான நாடற்ற மக்கள் அகதிகளாகவும் இல்லை.

**உலகில்வாழும் நாடற்றவர்கள்**

ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகர் ஆணையத்தின் (UNHCR) மதிப்பிட்டின் படி நாடற்ற மக்களில் மூன்றில் ஒரு பகுதியினர் சிறுவர்கள் எனக் கூறுகிறது. மேலும், 75 சதவிகிதத்திற்கும் அதிகமானோர் சிறுபான்மையினர் எனக் கூறுகிறது. அகதிகளாக நாடற்று வாழும் விழும்புநிலை மக்கள் கடுமையான மனித உரிமை மீறல்களால் பாதிக்கப்படுகின்றனர். UNHCR அடுத்து வரும் 10 ஆண்டுகளில் நாடற்றவர்கள் என்ற மக்கள் கூட்டத்தினை இல்லாதொழிப்பதற்காக 2014 ஆம் ஆண்டு தொடக்கம் பிரச்சாரத்தை ஆரம்பித்தது.

குர்திஸ் (Kurdish) மக்கள் அநேகமாக மிகவும் அறியப்பட்ட (மற்றும் மிகப்பெரிய) நாடற்ற தேசத்தவர்களாகும். ஆனால் மியான்மரில் துன்புறுத்தப்பட்ட ரோஹிங்கியாக்கள் (Rohingya) மற்றும் பாலஸ்தீனியர்கள் போன்ற ஏனைய நாடற்ற குழுக்களும் உலகம் முழுவதும் பரந்து வாழ்கின்றனர். இவ்வகையில் சமகாலத்தில் முக்கிய நாடற்ற மக்கள் தொடர்பாக ஆராய்ந்து பார்க்கலாம்.

**குர்துகள்**

குர்திஸ்தான் குர்துகளின் சொந்த நாடாக இருந்தால், இது 193,000 சதுர மைல்கள் (500,000 சதுர கிலோமீட்டர்) பரப்பளவைக் கொண்டதாக இருக்கும். இதன் எல்லைகளாக தென்கிழக்கு திசையில் துருக்கி, வடக்கு திசையில் ஈராக், மற்றும் சிரியா மற்றும் வடமேற்கு திசையில் ஈரானையும் எல்லைகளாகக் கொண்டிருக்கும். ஆனால் குர்திஷ் மக்கள் பல நூற்றாண்டுகளாக இந்த தொடர்ச்சியான

பிரதேசத்திற்கு உரிமை கோரியிருந்தாலும், அவர்களுக்குச் சொந்தமான நாடாக இது அங்கீகரிக்கப்படவில்லை.

முதலாம் உலகப் போருக்குப் பின்னர், மேற்குத்தேச நாடுகள் ”குர்திஸ்தான்” என்ற நாடு ஒன்றை உருவாக்கத் திட்டங்களை வகுத்தனர். ஆனால் லூசேன் ஒப்பந்தம் (Treaty of Lausanne) மூலம் பழைய ஒட்டோமான் பேரரசின் (Ottoman Empire) எல்லைகளுக்கு அப்பால் துருக்கியின் எல்லைகளை வரைந்ததினால் குர்திஸ்தான் என்றதொரு நாட்டினை உருவாக்க முடியாது போனது.






மதத்தை விட மொழி மற்றும் பழக்கவழக்கங்களால் ஒன்றிணைக்கப்பட்ட 20 முதல் 40 மில்லியன் குர்திஸ் மக்கள் வாழ்வதாக மதிப்பிடப்பட்டுள்ளது. ஆயினும் பெரும்பாலான மக்கள் முஸ்லீம்களாக உள்ளனர். குர்திஸ் மக்கள் எப்போதும் இப்பகுதியில் வாழும் பெரும்பான்மை இன மக்கள் மீது அதிக சந்தேகத்துடன் வாழ்கிறார்கள். அதேநேரம் அவர்களது சொந்த மண்ணில் ”வெளிநாட்டவர்கள்” போன்று நடாத்தப்படுகின்றனர்.

சதாம் குசையின் (Saddam Hussein) தன்மீது விசுவாசமற்றவர்களாக குர்திஸ் மக்கள் உள்ளனர் என்பதை ஒரு குற்றமாக கருதி, ஈராக்கில் 1980 ஆம் ஆண்டு, 300,000 குர்திஸ் மக்களின் குடியுரிமைப் பறித்தார். 1980 களின் பிற்பகுதியில் குர்திஸ் பெஸ்மெர்கா (Kurdish Peshmerga Militants) போராளிகள் சதாம் குசைனுக்கு எதிராக ஆயுதம் ஏந்திப் போராடத் தொடங்கினர். இதனால் வெறுப்படைந்த சர்வாதிகாரி சதாம் குசையின் குர்திஸ் கிராமம் ஒன்றை இரசாயனக் குண்டுகளை வீசி, பெண்கள் மற்றும் குழந்தைகள் உட்பட 5,000 பொதுமக்களைக் கொன்றார். சதாம் 2006 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 30 திகதி தூக்கிலிடப்பட்ட பின்னர், ஈராக்கிய குர்திஸ் மக்களுக்கு குர்திஸ்தான் என்ற பெயரில் 5 மில்லியன் மக்கள் வசிக்கும் அரை தன்னாட்சி பிராந்தியம் உருவாக்கப்பட்டது. ஆனாலும், இதுவரை குர்திஸ் மக்களின் சொந்த நாடாக குர்திஸ்தான் ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

சிரியாவில், 1962 ஆம் ஆண்டு ”அரபியாக்கம்” (Arabization) செய்யும் முயற்சியில் சிரிய அரசாங்கம் ஈடுபட்டது. இதனால் சிரியாவிலுள்ள இலட்சக்கணக்கான குர்திஸ் மக்களின் குடியுரிமை பறிக்கப்பட்டது. சிலர் பின்னர் சிரிய பிராசாவுரிமை பெற அனுமதிக்கப்பட்டனர். சிரியாவில் 2011 ஆண்டு உள்நாட்டுப் போர் ஆரம்பமாகியது. இக்காலப்பகுதியில் சிரியாவில் உள்ள 300,000 நாடற்ற குர்திஸ் மக்கள் வாழ்ந்ததாக மதிப்பிடப்பட்டது. இவர்களில் பலர் வன்முறையிலிருந்து தப்பித்து வேறு இடங்களில் அகதிகளாகினர்.

**ரோஹிங்யா**

ஐக்கிய நாடுகள் சபை ரோஹிங்கியாக்களை (Rohingya) ”உலகில் மிகவும் துன்புறுத்தப்பட்ட சிறுபான்மையினர்” என அழைத்தது. மியான்மரில் ரோஹிங்கியர்கள் எவ்வளவு காலமாக வாழ்கிறார்கள் என்பது தொடர்பாகத் தெளிவாகத் தெரியவில்லை. ஆயினும், ஒன்பதாம் நூற்றாண்டில் ராக்கைன் (Rakhine) மாநிலத்தின் முதல் தலைமுறை முஸ்லீம் மக்கள் குடியேறியதாகச் சிலர் கூறுகின்றனர்.



பெரும்பான்மையாக பௌத்தர்கள் வாழும் மியன்மார் நாட்டில் இஸ்லாத்தை பின்பற்றுகின்ற ரோஹிங்கியர்கள் தமது தாய் மொழியைப் பேசுகிறார்கள்.

1982 ஆம் ஆண்டு மியான்மர் புதியதொரு குடியுரிமைச் சட்டத்தை நிறைவேற்றியது, இது ரோஹிங்கிய மக்களின் குடியுரிமையினைப் பறித்தது. இதன் பின்னர் மியன்மாரின் குடிமக்களாக வாழும் சட்டரீதியான உரிமையினை இவர்கள் இழந்தனர். ரோஹிங்கியர்கள் பாரபட்சமான மற்றும் அநீதியான கொள்கைகளுக்கு உட்படுத்தப்பட்டதுடன், அவர்களின் நடமாட்டமும் கட்டுப்படுத்தப்பட்டது. அவர்களின் வாழ்விட நிலங்கள் அபகரிக்கப்பட்டது. மேலும் அவர்களின் சுகாதாரம், பாதுகாப்பு, கல்வி மற்றும் வேலைவாய்ப்பு போன்ற வாழ்வாதார விடங்கள் மீது கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன.

இதன்விளைவாக ரோஹிங்கியா போராளிகள் மியான்மரில் உள்ள காவல் நிலையங்களை 2017 ஆம் ஆண்டு தாக்கினர். இதன் விளைவாக மோதல் ஆரம்பமாகியது. இராணுவத்தின் உதவியுடன் பௌத்த கும்பல்களால் 13,000 மக்கள் கொலை செய்யப்பட்டதுடன், பெண்கள் பாலியல் வன்முறைகளுக்கு உட்பட்டனர். ரோஹிங்கிய மக்களின் 200 கிராமங்களை இடித்தழித்துக் கொடூரமான அடக்குமுறைகளில் இவர்கள் ஈடுபட்டனர். ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை மியான்மர் இராணுவத்தின் நடவடிக்கைகளை ”இனச் சுத்திகரிப்புக்கான உதாரண பாடநூல்” என அழைத்தது.

பெருமளவிலான நாடற்ற ரோஹிங்கியா மக்கள் மியான்மாரிலிருந்து துரத்தப்பட்டு வங்காளதேசத்தில் அகதிகளாகத் தஞ்சம் புகுந்தனர். வங்காளதேசத்தில் உள்ள குடுபலாங் (Kutupalong) பிரதேசத்தில் உலகிலேயே மிகப் பெரிய அகதிகள் முகாம் இவர்களுக்காக அமைக்கப்பட்டது. மியான்மரில் இருந்த 600,000 ரோஹிங்கியா முஸ்லீம் அகதிகள் இங்கு தங்கியுள்ளனர். 2019 ஆம் ஆண்டு 730,000 க்கும் அதிகமான ரோஹிங்கியாக்கள் மியான்மரில் உள்ள ரக்கைன் மாநிலத்தை விட்டு வெளியேறியதன் மூலம், பௌத்த கும்பல்களினால் மேற்கொள்ளப்பட்ட கிராமங்களை முற்றுகையிட்டு எரிப்பது உட்பட மிருகத்தனமான துன்புறுத்தலில் இருந்து தப்பினர்.



**பாலஸ்தீனர்கள்**

இரண்டாம் உலகப் போர் முடிவடைந்த பின்னர் மத்திய கிழக்கில் நிகழ்ந்த அரசியல் மற்றும் இராணுவ எழுச்சிகளின் விளைவாக, மில்லியன் கணக்கான பாலஸ்தீனர்கள் தமது தாய்நாட்டை விட்டு வெளியேறி அயல்நாடுகளிலும் மத்திய கிழக்கின் ஏனைய பிரதேசங்களிலும் மற்றும் உலகின் வெவ்வேறு பகுதிகளிலும் அகதிகளாகக் குடியேற வேண்டியேற்பட்டது. உலகெங்கிலும் 6.4 மில்லியன் பாலஸ்தீனிய மக்கள் நாடற்றவர்களாக வாழ்வதாக நம்பப்படுகிறது. பெயரளவில் பலருக்குப் பிரசாவுரிமை இருந்தாலும், ஏனைய மக்கள் அனுபவிக்கும் அனைத்து உரிமைகளையும் இவர்களால் அனுபவிக்க முடியவில்லை. அரபு-இஸ்ரேலிய தகராற்றின் விளைவாகப் பாலஸ்தீன அகதிகளின் எண்ணிக்கை பெரும் சர்ச்சைக்குரிய விடயமாகியது.

1947 ஆம் ஆண்டு பாலஸ்தீன அரசின் சுமார் 2,400 சதுர மைல்கள் அல்லது 6,215 சதுர கிலோமீட்டர் பரப்பளவை யூத நாடாகவும் (இது இஸ்ரேல் ஆனது) ஏனைய பகுதியை அரபு நாடாகவும் பிரிக்க ஐக்கிய நாடுகள் சபை முடிவு செய்தது. இதனை பலஸ்தீனர்கள் கடுமையாக எதிர்த்தனர். அரபு நாடுகள் போருக்கு அணிதிரளத் தொடங்கினர். அரபு நாடுகளின் கூட்டணிகள் 1948 ஆம் ஆண்டு இஸ்ரேலைத் தாக்கின. 1948 ஆம் ஆண்டு மே மாதம் இஸ்ரேல் அரசு பிரகடனப்படுத்தப்பட்ட பின்னர் பாலஸ்தீனத்தில் அரபு மற்றும் யூத மக்களுக்கிடையிலான யுத்தம் ஆரம்பமாகியது.

பாலஸ்தீனர்கள் தங்கள் வரலாற்றுத் தாயகத்திலிருந்து இடம்பெயர்ந்ததாக கூறும் நிகழ்வு, 1948 மற்றும் 1967 இல் நடந்த ஆறு நாள் அரபு-இஸ்ரேலிய மோதல்களினால் மேற்குக் கரை மற்றும் காசா பகுதி உட்பட இன்னும் பல பிரதேசங்களை இஸ்ரேல் ஆக்கிரமித்துக் கொண்டதுடன் ஆரம்பமாகியது. பாலஸ்தீனப் பிரதேசத்தில் இஸ்ரேல் பிரகடனப்படுத்தப்பட்ட பின்னர் பல அரபு நாடுகள் இவ்விவகாரத்தில் தலையிடத் தொடங்கின. இதனால் ஏற்பட்ட ஆயுத மோதலின் விளைவால் 700,000 அல்லது 800,000 பாலஸ்தீனர்கள் மேற்குக்கரை, காசா பகுதி, ஜோர்டான், லெபனான் மற்றும் சிரியா போன்ற நாடுகளில் தஞ்சமடைந்தனர். சுமார் 150,000 பேர் இஸ்ரேலை விட்டு வெளியேறாது புதிய அரசின் பிரைசைகளாக மாறினர்.






பல மதிப்பீடுகளின்படி, 1967 ஆம் ஆண்டு இஸ்ரேலுக்கும் அரபு நாடுகளுக்கும் இடையே நடந்த “ஆறு நாள் போரின் போது, சுமார் 300,000 பாலஸ்தீனர்கள் மேற்குக் கரையிலிருந்து ஜோர்டானில் உள்ள கிழக்குக் கரைக்கும் சிரியாவிற்கும், காசா பகுதியிலிருந்து எகிப்து ஜோர்டானுக்கும் அகதிகளாகச் சென்றனர். இதற்குப் பிற்பட்ட காலங்களில் கணிசமானளவு பாலஸ்தீனர்கள் ஜோர்டான் (1970-71), லெபனான் (1982), குவைத் மற்றும் ஏனைய வளைகுடா நாடுகள் (1990-92) மற்றும் லிபியா (1995-96) ஆகிய நாடுகளை விட்டு வெளியேற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. கணிசமான பாலஸ்தீனியர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட சந்தர்ப்பங்களில் இடம்பெயர்ந்துள்ளனர். இது அவர்களின் தேசியம் மற்றும் அவர்களின் சட்டபூர்வமான நிலை தொடர்பான சட்டச் சிக்கலை உருவாக்கியுள்ளது.

### ரோமா (Roma)

ரோமா என்று அழைக்கப்படும் ரோமானியர்கள் இந்தோ-ஆரிய இனக்குழுவில் இருந்து தோன்றியவர்களாகும். பாரம்பரியமாக ஐரோப்பாவில் வாழும் நாடோடி மக்களாக கருதப்படும் இவர்கள் அமெரிக்காவில் புலம்பெயர் மக்களாகக் கருதப்படுகிறார்கள்.

பத்தாம் நூற்றாண்டுகளில் இந்தியத் துணைக்கண்டத்தில் உள்ள **ராஜஸ்தான், ஹரியானா மற்றும் பஞ்சாப்** பிரதேசங்களிலிருந்து உலகம் முழுவதும் சிதறிச் சென்று குடியேறி மக்களை அழைப்பதற்கு ரோமோ என்ற பதம் பயன்படுத்தப்படுகிறது. இவர்கள் பேசும் மொழியில் இன்றும் பல சமஸ்கிருதம் மற்றும் ஹிந்தி மொழிச் சொற்கள் கலந்திருப்பதாக கூறுகின்றனர். இவர்கள் எந்தவொரு பிரதேசத்தையும் தமது தாயகமாக உலகின் எப்பிரதேசத்திலும் உரிமை கோரவில்லை. அல்லது எந்தவொரு பிரதேசத்திலும் தொடர்ந்தேர்ச்சியாக வாழவுமில்லை.




நிரந்தரமாக குடியிருப்புக்கள் உட்பட தனிப்பட்ட சொத்துக்களில் நம்பிக்கையற்ற ரோமோக்கள் ஐரோப்பா முழுவதும் அலைந்து திருந்தனர். இதனால் ஐரோப்பிய சமுதாயத்தின் விளிம்பு நிலை மக்களாக வாழ்ந்ததுடன், திருடர்களாக, மறைந்து வாழும் அல்லது ஒழித்து வாழும் மக்களாக வாழ்ந்தனர்.

துருக்கி, கிரீஸ், செர்பியா, ருமேனியா, மால்டோவா, பல்கேரியா, நார்த் மாசிடோனியா, ஹங்கேரி, ஸ்லோவாக்கியா மற்றும் ஸ்பெயின் நாடுகளில் குடியேறியுள்ளனர். இங்கிருந்து பின்னர் ஐரோப்பா முழுவதும் குடியேறிய இவர்கள் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பின்னர் அமெரிக்காவிற்கு குடிபெயர்ந்தனர். இன்று அமெரிக்காவில் ரோமானியர்கள் பத்து இலட்சத்திற்கும் அதிகமாக வாழ்வதாக மதிப்பிடப்பட்டுள்ளது.



Countries with a significant Romani population according to unofficial estimates.

+ 1,000,000

+ 100,000

+ 10,000

இதனை விட பிரேசிலில் 2011 ஆம் ஆண்டு சனத்தொகை கணக்கெடுப்பின்படி சுமார் 800,000 ரொமானியர்கள் வாழ்வதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இதனால் ”ஜிப்சிகள்” (gypsies) என்ற இழிவான வார்த்தையால் அழைக்கப்பட்ட இம்மக்கள் பல நூற்றாண்டுகளாக ஐரோப்பாவில் துன்புறுத்தல்கள், பாரபட்சப்படுத்தல்களுக்கு உட்பட்டு வருகின்றனர்.

இரண்டாம் உலகப் போரின்போது நாசிசப்படைகளின் சித்திரவதை முகாம்களில் இலட்சக்கணக்கான ரோமாக்கள் அடிமைப்படுத்தப்பட்டதுடன், துன்புறுத்தப்பட்டு கொல்லப்பட்டனர். உலகளவில் ரோமானிய மக்கள் தொகை தொடர்பான அதிகாரப்பூர்வ அல்லது நம்பகமான எண்ணிக்கை எங்கும் கிடையாது. பல ரோமானிகள் பாகுபாட்டிற்கு பயந்து உத்தியோகபூர்வ மக்கள் தொகை கணக்கெடுப்பின் போது தங்கள் அடையாளத்தை பதிவு செய்ய மறுக்கின்றனர். சிலர் உள்ளூர் மக்களுடன் கலப்பு திருமணத்தினை செய்து அதன்வழி வரும் சந்ததியினராகியுள்ளனர் சிலர் ரோமானி என்று மட்டும் தம்மை அடையாளம் காட்டுகின்றனர். சிலர் ரோமானி என்று அடையாளப்படுத்த மறுக்கின்றனர். ரோமோக்கள் முன்னாள் யூகோஸ்லாவியா மக்களுடன் சமாதானமாக வாழ்ந்தனர். ஆனால் 1990 களில் சோவியத் முகாமிலிருந்து இந்நாடு பிரிந்தபோது, போஸ்னியா-ஹெர்சகோவினா மற்றும் கொசோவோ போன்ற அரசுகளில் நிகழ்ந்த ஆயுத மோதல்களால் இலட்சக்கணக்கான ரோமாக்கள் அங்கிருந்து இடம்பெயர்ந்தனர்.